


**12. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. ஜெர்மனி உடனான இந்தியாவின் நட்புறவையும், ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் இந்தியா உறுதியாக உள்ளது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. விளிம்பு நிலை சமுகத்தினருக்கு ஆளுமையும், சமத்துவத்தையும் உறுதிசெய்வதாக, கல்வி அமைய வேண்டுமென்று குடியரசு துணைத்தலைவர் திரு. C. P. ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.

3. வெளிநாடுவாழ் தமிழர்களுக்காக பல்வேறு திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. மருத்துவ கட்டமைப்பில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்வதாக மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி.கீதாஜீவன் சுட்டிக்காட்டினார்

5. கடலூர், அரியலூர், மயிலாடுதுறை, தஞ்சை, தீருவாரூர், நாகை புதுக்கோட்டை மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் கூறியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

ஜெர்மனி உடனான இந்தியாவின் நட்புறவையும், ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் இந்தியா உறுதியாக உள்ளது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் ஜெர்மன் தலைவர் திரு. ப்ரெட்ரிச் மெர்ஸ் உடன் நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் அவருடன் இணைந்து செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், இருநாடுகளுக்கு இடையிலான இருதரப்பு வர்த்தகம், 50 பில்லியன் டாலரை தாண்டி சாதனை படைத்திருப்பதாக குறிப்பிட்டார்.

பாதுகாப்பு தொழிற்சாலைகள் இடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை இருநாடுகளும் மேற்கொள்ளும் என்றும், வளர்ச்சி மற்றும் உற்பத்தியில் இணைந்து செயலாற்ற புதிய வாய்ப்புகள் கண்டறியப்படும் என்றும் குறிப்பிட்டார்.

ராணுவம் மற்றும் பாதுகாப்பில் வளர்ந்து வரும் ஒத்துழைப்பு பரஸ்பர நம்பிக்கையின் அடையாளமாக திகழ்கிறது என்றார்.

பாதுகாப்பு சார்ந்த வர்த்தக நெறிமுறைகளை இலகுவாக்கியதற்காக ஜெர்மன் தலைவருக்கு பிரதமர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இருநாடுகளிடையே தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாக கூறிய பிரதமர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரிவில் இருநாடுகளுக்கும் ஒரே மாதிரியான முன்னுரிமைகள் இருப்பதை சுட்டிக்காட்டினார்.

ஜெர்மன் தலைவரின் முதல் இந்திய பயணம் மற்றும் முதல் ஆசிய பயணத்தின் மூலம் இருநாடுகளுக்கு இடையிலான உறவுகளின் முக்கியத்துவம் வெளிப்படுவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஜெர்மன் தலைவர் ப்ரெட்ரிச் மெர்ஸ் இருநாடு உறவுகளையும் புதிய உச்சங்களுக்கு எடுத்துச் செல்ல இந்தியாவும், ஜெர்மனியும் விரும்புவதாக எடுத்துரைத்தார்.

முன்னதாக இரு தலைவர்களின் முன்னிலையில் முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாயின.

சர்வதேச பிராந்திய பிரச்சனைகள் குறித்தும் இருதலைவர்களும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖

சி.பி. ராதா கிருஷ்ணன்

விளிம்பு நிலை சமுகத்தினருக்கு ஆளுமையும், சமத்துவத்தையும் உறுதி செய்வதாக கல்வி அமைய வேண்டுமென்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.

புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் 9-வது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், கல்வி, மனதை வலுப்படுத்தி அறிவாற்றலை விரிவுப்படுத்தி ஒருவரின் மனப்பாங்கை உருவாக்குவதாக தெரிவித்தார்.

பொருளாதாரம், சமூக வளம், ஆராய்ச்சி திறன்களின் மேம்பாட்டிற்காக மாணவர்கள் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

கல்வியும், உரிய பயிற்சிகளும் இளையோருக்கு ஆளுமை வழங்கி வளர்ச்சியடைந்த இந்தியா உருவாக வழிகோலும் என்றார்.

நவீனமும் கலாச்சார மரபுகளும் இணைந்து பயணிப்பதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், இந்தியாவின் சீர்மிகு வரலாறு எப்பொழுதுமே அறிவுத் தேடலுக்கு உத்வேகமாக உள்ளதாக குறிப்பிட்டார்.

இந்திய மொழிகளில் புதிய கற்றல் மையங்களை உருவாக்கியதற்காக இப்பல்கலைக்கழகத்தை திரு. சி.பி.ராதா கிருஷ்ணன் பாராட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖

தேசிய இளையோர் தினம்

சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாள் தேசிய இளையோர் தினமாக இன்று கொண்டாடப்படுகிறது.

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் தி, சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி

உள்ளிட்டோர் இளையோர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்ததோடு, சுவாமி விவேகானந்தருக்கு சிறப்பு அஞ்சலி செலுத்தினர்.

தேசிய இளையோர் தினத்தை ஒட்டி வளர்ச்சியடைந்த பாரதம் இளையோர்கள் கலந்துரையாடல் 4 நாள் நிகழ்வின் நிறைவு நாளில் பிரதமர் இன்றுமாலை புதுதில்லியில் பங்கேற்கிறார்.

நாடுமுழுவதிலுமிருந்து பங்கேற்றுள்ள 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளையோருடன் பிரதமர் இதில் கலந்துரையாடுகிறார்.

சர்வதேச நாடுகளின் இளம் தலைவர்களும் இதில் பங்கேற்றுள்ளனர்

இதனைத் தொடர்ந்து நாட்டின் வளர்ச்சிக்கான முன்னுரிமைகள் தேச கட்டமைப்பிற்கான இலக்குகள் தொடர்பான கட்டுரை தொகுப்பையும் பிரதமர் வெளியிடுகிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

அஷ்விணி வைஷ்ணவ்

வளர்ச்சியடைந்த சுயசார்பு இந்தியாவை உருவாக்க நாட்டு மக்கள் உறுதியேற்க வேண்டுமென்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் வலியுறுத்தி உள்ளார்

சுவாமி விவேகானந்தரின் 163-வது பிறந்த தினத்தை ஒட்டி விவேகானந்தருக்கு மரியாதை செலுத்திய அவர், அவரது கொள்கைகளும், தனித்துவமும் இளையோருக்கு என்றென்றும் உத்வேகமாக இருக்கும் என்று கூறினார்.

சுவாமி விவேகானந்தருக்கு அஞ்சலி செலுத்தியுள்ள மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் அவரது உரையாடல்கள் இளையோருக்கு என்றென்றும் எழுச்சியூட்டும் என புகழாரம் சூட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖

இஸ்ரோ

ஸ்ரீஹரி கோட்டா சதீஷ்தவான் விண்வெளி மையத்திலிருந்து EOS N-1 செயற்கை கோள் உட்பட துணை செயற்கை கோள்களுடன் இன்று காலை மணி 10.18-க்கு விண்ணில் செலுத்தப்பட்ட PSLV – C – 62 ராக்கெட்

தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதன் காரணமாக பாதை மாறியதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக இந்த ராக்கெட்டால் செயற்கை கோள்களை சுற்றுப்பாதையில் நிலை நிறுத்த முடியாத சூழல் ஏற்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதனையடுத்து PSLV – C – 62 ராக்கெட் திட்டம் தோல்வியடைந்ததாகவும், இது குறித்து விரிவாக ஆராயப்படும் என்றும் திரு. நாரயணன் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

வெளிநாடுவாழ் தமிழர்களுக்காக பல்வேறு திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அயலக தமிழர் தினத்தை ஒட்டி விருதுகளை வழங்கும் நிகழ்ச்சியில் பேசியஅவர், வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களின் நலன்கருதி, அயலக தமிழர்கள் நலவாரியம் அமைக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

தமிழகத்தில வசிக்கும் இலங்க தமிழர்களுக்கு 7 ஆயிரத்து 469 வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு படிப்படியாக அவை கட்டமைக்கப்பட்டு வருதாக கூறினார்.

முன்னதாக தனியார் நிறுவனத்துடன் இணைந்து அமெரிக்கவாழ் தமிழர்கள் வழங்கிய இருதள பேருந்தை முதலமைச்சர் இன்று சென்னையில் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

கீதா ஜீவன்

மருத்துவ கட்டமைப்பில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்வதாக மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 364 மருத்துவ மாணாக்கருக்கு அரசின் மடிக்கணிணிகளை இன்று வழங்கிப் பேசிய அவர், தனிநபர் வருமானம், பொருளாதாரம், தொழில்நுட்ப வளர்ச்சி என அனைத்திலும் தமிழகம் சிறப்பாக செயல்படுவதாக கூறினார்.

வெளிநாட்டவரும் சிகிச்சை பெறும் வகையில் மருத்துவ தலைநகராக சென்னை திகழ்கிறது என்று கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

கோவி.செழியன்

தூத்துக்குடி மாவட்டம் ஒட்ட பிடாரத்தில் புதிதாக தொடங்கப் பட்டுள்ள அரசு கலை அறிவியல் கல்லூரியை மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

கல்லூரியின் அடிப்படை வசதிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்த அவர், அரசின் நலத்திட்டங்கள் குறித்து மாணாக்கரிடையே உரையாற்றினார்.

❖❖❖❖❖❖❖❖❖

கே.என்.நேரு

கடலூர் மாவட்டத்தில் 133 கோடி ரூபாய் மதிப்பிலான உள்கட்டமைப்பு பணிகளை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு இன்று திறந்து வைத்துள்ளார்.

காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி அலுவலக கட்டிடம், வடலூர் வள்ளலார் பேருந்து நிலையம் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

இந்நிகழ்ச்சியில் மாநில உழவர் நலத்துறை அமைச்சர் திரு. M.R.K. பன்னீர் செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

மதுரையில் தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர்கள் பங்கேற்கும் தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான முதல் கூட்டம் வரும்

23-ம் தேதி நடைபெறும் என்று பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிம் பேசியஅவர், சென்னை, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களிலும் இத்தகைய கூட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் ஆராயப்படுவதாக கூறினார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெறுபவர்கள் குறித்து பி.ஜே.பி. மூத்த தலைவர் திரு.அமித்ஷாவும்,

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமியும் முடிவு செய்வார்கள் என்றார்.

ஆட்சியில் பங்கு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், தமிழகத்திலிருந்து திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டுமென்பதே தங்களது நோக்கம் என்றும், கூட்டணி ஆட்சி குறித்து தாங்கள் எதுவும் சொல்லவில்லை என்றும் தெளிவுப்படுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖

திருவள்ளூர் வாய்ஸ்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரதாப் தலைமையில் நடைபெற்ற தேசிய இளையோர் விழிப்புணர்வு சுதேசி ஓட்டத்தில் ஏராளமான சட்டக்கல்லூரி மாணவர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

தர்மபுரி – வாய்ஸ்

தர்மபுரி ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அரசு ஊழியர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நாளை நடைபெறுகிறது.

இதில் தேவைப்படுவோருக்கு யோகாப் பயிற்சி அளிக்கப்படும் என ஆட்சித்தலைவர் திரு.சதீஷ் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கடலூர், அரியலூர், மயிலாடுதுறை, தஞ்சை, திருவாரூர், நாகை புதுக்கோட்டை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் அறிவித்துள்ளது.

தென்தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த 3 நாட்களுக்கு இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்திறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖